1978 பிப்ரவரி 27]

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

திரு. து. புருஷோத்தமன் : பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே தாங்கள் வருவதற்கு முன்பாகவும், வந்ததற்குப் பிறகும், இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் சிலர் வேறு மாநிலத்தில் தங்களுடைய கட்சி வெற்றி பெற்றதைக் குறித்து. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, சென்ற 6—1—1978 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் இல்லாததால் அன்று கொண்டு வரப்பட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லை. அதற்கு எப்போது பதில் அளிக்கப்படும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை முதலமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) உரிமைப் பிரச்னைகள்.

(அ) இந்தியன் எக்ஸ்பிரஸ் நடத்தும் சண்டே ஸ்டாண்டர்டு பத்திரிகை பேரவை நடவடிக்கை பற்றி தவறாக வெளியிட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவை விதி 184-ன் கீழ் அவை உரிமை மீறல் குறித்து ஒரு பிரச்னையை திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் நடத்தும் '' சன்டே ஸ்டாண்டர்டு '' மீது கொண்டு வர அனுமதி கேட்டு இருக்கிறார்கள். அவருக்கு அனுமதி அளிக்கிறேன். அதை படிக்குமாறு மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 184-ன் அடியிற் கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினையை ஆங்கில நாளிதழ் ' இந்தியன் எக்ஸ்பிரஸ் ' மீது சட்டப் பேரவையில் எழுப்ப தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

'தமிழக அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களின் பிரச்சனை குறித்து' 1978-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25-ம் நாளன்று எங்கள் கட்சியின் தலைவர் அவர்கள் பேசும்போது, 'நிதியமைச்சர் மனோகரன், முதலமைச்சர் வந்ததும் கைது செய்யப்பட்டவர்கள்

விடுதலை செய்யப்பட்டு, பேச்சு வார்த்தை நடைபெறும்' என்று உறுதிமொழி தந்தார்கள். ஆனல் முதலமைச்சர் போராட்டத்தை வாபஸ் பெற்ற பிறகு தான் பேச்சுவார்த்தை என்று நிபந்தனை விதித்து இருக்கிறர். எனவே முன்னவர் அளித்த உறுதிக்கும், முதலமைச்சர் ஆற்றிய உரைக்கும் இருக்கின்ற வேறுபாடு காரணமாக வெளிநடப்புச் செய்கிறேம்'' என்று கூறி நாங்கள் வெளிநடப்பு செய்தோம்.

பின்னர் எங்கள் அறையில் இருந்த ஒலிபெருக்கி மூலமாக அவையின் வாதத்தைக் கேட்டபோது, முதலமைச்சர் ஒரு கட்டத்தில், 'அவை முன்னவர் மனேகரன் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது மாதிரி அப்படி உறுதி அளிக்கவில்லை என்று தகவல் சொல்லியிருக்கிறர்; ஆனல் அப்படிப்பட்ட தவருன தகவலை கூறிவிட்டு நாங்கள் வெளிநடப்பு செய்ததாகத் தெரிவித்தார். அவை முன்னவர் அப்படிப்பட்ட உறுதியினை அவைக்கு வழங்கினரா இல்லையா என்பதில் எதிர்க்கட்சியினருக்கு, குறிப்பாகவும், சிறப்பாகவும் ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ், மார்க்கிஸ்ட் கட்சித் துணைத் தலைவர் திரு. உமாநாத் போன்றவர்களுக்கு சந்தேகம் எழுந்த காரணத்தால், அவையின் நடவடிக்கை குறிப்புகளை வரவழைத்து, பொதுப்பணித் துறை அமைச்சர் படித்தார். முதல் பகுதியை அவர் படித்த நேரத்தில் கூட, திரு. உமாநாத் அவர்கள் பின்பகுதியையும் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவர் படித்தபோது அதில் ''அவர்களோடு கலந்து பேசத் தயார், சொன்னதைச் செய்வதற்கு முதலமைச்சர் இருக்கிறர்; அவர் நிச்சயம் விடுதலை செய்யும் தகவலை அறிவிப்பார் என்பதை நான் அவை முன்னல் தெரிவிக்கிறேன்'' என்று தெளிவாகப் படிக்கப்பட்டது. இதன் மூலம் நாங்கள் வெளிநடப்பு செய்தது சரியென்ற வகையிலும், நாங்கள் முன்னுக்குப் பின் முரணுகக் கூறவில்லை என்பதும் தெளிவாயிற்று. அதை இந்த அவையிலே தொடர்ந்து திரு. ஜேம்ஸ் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆனல் உண்மை இவ்வாறிருக்க, அவை நடவடிக்கைகள் இந்த வகையில் நடந்து இருக்க, (26–2–1978) நேற்றைய ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளிதழில், அவையின் நடவடிக்கை குறிப்பினை அமைச்சர் ராமச்சந்திரன் எடுத்துப் படித்ததையோ, அதில் தெளிவாக்கப்பட்ட உண்மைகள் பற்றியோ குறிப்பிடாமல் மறைத்திருக்கிறர்கள்.

முரசொலி நாளிதழ் மீது இது போன்ற ஒரு உரிமைப் பிரச்னை கடந்த ஆண்டு எழுந்த போது, சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பினை 23–7–1972 அன்று அளித்து இருக்கிறீர்கள். 'அவையின் நடவடிக்கை குறிப்புகள் வெளியிடப்படுவது சுருக்கமாக இருந்தாலும், அவைகளின் மையக் கருத்துக்கள் வேறுபடாமல் வெளியிடப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள்.

இதிலே மையக் கருத்தாகிய வெளி நடப்பிற்கான காரணம் சரி என்று தெளிவானதை அறவே மறைத்து, முன்னவர் உறுதிமொழி அளிக்கவில்லை என்ன வரையில் முடித்து, அது உண்மையா அல்லவா என்பது சட்டசபையில் வெளியான விவரம் அப்படியே இந்தப் பத்திரிகை மறைத்திருப்பது வேண்டுமென்றே செய்த காரியமாகும். இது திட்டமிட்டு நாட்டு மக்களுக்குத் தவறான தகவலைத் தந்து, அவர்களைத் திசை திருப்பும் நோக்கத்துடன் அமைந்திருக்கிறது. இது இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும். ஆகவே, இதனை நாங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி, விசாரிக்க வேண்டுமென்று கேட்டு, இதனை அவையிலே எழுப்புவதற்கு தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

(ஆ) 'மாலை முரசு', 'அண்ணா', 'தினமணி' நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் போன்று மாண்புமிகு உறுப்பினர்கள் து. புருஷோத்தமன், ஏ. ரகுமான்கான், செஞ்சி என். இராமச்சந்திரன் ஆகியோர் முறையே மாலைமுரசு, தினமணி, அண்ணா பத்திரிகைகள் மீது கொடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட பத்திரிகைகளிடமிருந்து விளக்கம் கேட்ட பிறகு என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம்.

திரு. ஏ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். 184-வது விதியின் கீழ் நான் ஒரு பிரச்சனையை எழுப்பியிருக்கிறேன். அது இன்னும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். அது முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, என்றைக்கு எடுத்துக் கொள்வது என்பது முடிவு செய்யப்படும். இப்படி தின்சரி அதைப்பற்றிக் கேட்டால் எப்படி? ஏதாவது தெரிய வேண்டுமானால் என்னுடைய அறையில் வந்து கேளுங்கள்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருவெறும்பூர் பாரத் கனரக மின்கல தொழிற்சாலையில் உள்ளிருப்பு வேலை நிறுத்தமும் சில தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கமும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் பாரத் கனரக மின்கலத் தொழிற்சாலை குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது இந்த அவையின் இதர